தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், பல்லடம் அரசு மருத்துவமனை வாளகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பத்திரிகையாளர் நல நிதியம் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்ட ஜனசக்தி செய்தியாளர் நாகராஜ் க்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக மருத்துவ நிதியுதவி ரூ.2.50 இலட்சத்திக்கான காசோலையை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மணிஷ் நாரணவரே, இணை இயக்குநர் மருத்துவப்பணிகள் மரு.மீரா, பல்லடம் நகர்மன்றத்தலைவர் திருமதி கவிதாமணி ராஜேந்திரகுமார் ஆகியோர் உள்ளனர்.

காட்டுமன்னார் கோவிலில், முன்னாள் மாவட்டச் செயலாளர் –

எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி 36-ஆம் நினைவு நாள் பேரணி - பொதுக்கூட்டம்!

அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – கோவி.செழியன் சிறப்புரை!

கடலூர், நவ.11

ஒருங்கிணைந்த தென் னாற்காடு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கட லூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அவர் களின் தகப்பனாருமான பெருந்தலைவர் வீர வேங்கை எம்.ஆர்.கிருஷ் ணமூர்த்தி அவர்களின் 36 ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு, இன்று (11.11.2025,



செவ்வாய்க்கிழமை), பெருந்தலைவர் அவர்க ளின் நினைவு இடம் அமைந்துள்ள மோவூரிலி ருந்து ஊர்வலமாக புறப் பட்டு, காட்டுமன்னார் கோவில் செட்டித் தெருவில் அமைக்கப்பட் டுள்ள பொதுக்கூட்ட மேடை வந்தடைகிறது.

பின்னர் நினைவு நாள் பொதுக்கூட்டம், ஒன்றிய கழக செயலாளர் அ.முத்து சாமி தலைமையில் நடை பெறுகிறது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச் சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், தோல் பொருள் கள் பதனிடுவோர் தொழி லாளர் வாரியத் தலைவர் நெல்லிக்குப்பம் புக ழேந்தி, முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் குத்தா லம் கல்யாணம் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் முன் னாள், இந்நாள் சட்ட மன்ற மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், முன்னாள் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், அனைத் துக் கட்சி நிர்வாகிகள் உளிட்ட பலர் கலந்துக் கொண்டு நினைவஞ்சலி செலுத்த உள்ளனர்.

அலிஷேக் மீரான் சிறப்புரை!

மும்பையில் முப்பெரும் விழா - நலத்திட்ட உதவிகள்!

மும்பை புறநகர் பிவாண்டி கிளை சார்பில் – புதிய கிளை நிர்வாகிகள் அறிமுக விழா!

சென்னை, நவ.11-

மும்பை புறநகர் மாநிலதி.மு.க. பிவாண்டி கிளை சார்பில் முப்பெ ரும் விழா மற்றும் புதிய கிளை நிர்வாகிகள் அறி முக விழா 16.11.2025 ஞாயிறு அன்று மாலை சரியாக 6.00 மணியள வில் பிவாண்டியில் உள்ள சில்கோ ஹவுஸ் கீழ் தளத்தில் நடைபெறு கிறது.

இந்நிகழ்வில் - மும்பை புறநகர் திராவிட முன் னேற்றக் கழகப் பொறுப் பாளர் அலிஷேக் மீரான் சிறப்புரையாற்றுகிறார்.

பிவாண்டி கிளையின் செயலாளர் எம்.ஜாகிர் உசேன் தலைமையில் நடைபெறும் இவ்விழா வில் புறநகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்புக் குழு உறுப்பி னர் மெஹபூப் பாஷா சேக் வரவேற்புரை ஆற்ற, புறநகர் திராவிட முன் னேற்றக் கழக பொறுப் புக் குழு உறுப்பினர் முனைவர் வதிலை பிரதா பன் துவக்க உரையாற்று கிறார்.

நிகழ்வினை திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி அமைப்பா ளர் ந. வசந்தகுமார் தொகுத்து வழங்குகிறார்.

மூவேந்தர்கள் படத்திறப்பு

தந்தை பெரியார் படத்தினை பொறுப்புக் குழு உறுப்பினர் ஜெயி னுலாபுதீனும், பேரறி ஞர் அண்ணா படத் தினை பீவாண்டி கிளை அவைத் தலைவர் சான் பாஷாவும், முத்தமிழறி ஞர் கலைஞர் படத்தை பிவாண்டி கிளைத் துணைச் செயலாளர் கன்னி முத்துவும் திறந்து வைக்கின்றனர்.

முன்னிலை

புறநகர் திராவிட முன் னேற்றக் கழகப் பொறுப் புக் குழு உறுப்பினர்கள் ஜேம்ஸ் தேவதாசன், சிவக்குமார் சுந்தர்ராஜ், பிவாண்டி கிளை பொருளாளர் எம். எஸ்.முஸ்தாக் அலி மற் றும் பிவாண்டி கிளை துணைச் செயலாளர் பேராசிரியர் சம்பத் ஆகி யோர் நலத்திட்ட உதவி களை வழங்குகின்றனர்.

சிறப்பு அழைப்பாளர்கள்

முகமது அலி, ராமலிங் கம், ஷாகுல் ஹமீது, ஜெயக்குமார், சபீர் ஷேக், ஜாகிர் ஹசன், கோவிந்தன், சபி, ஜைய ராம், வி வி பெருமாள், முத்துக்குமார், கு. தர்ம லிங்கம், க. ஜீவானந்தம். கணேசன், பகுத்தறிவா ளர் கழகத் தலைவர், அ. ரவிச்சந்திரன் மற்றும் பிவாண்டி கிளைக்கழக மேலமைப்பு பிரதிநிதி செந்தில்குமார் ஆகி யோர் முன்னிலை வகிக் கின்றனர்.

நலத்திட்ட உதவிகள்

பொறுப்புக் குழு உறுப்பினர்கள் ஜேம்ஸ் தேவதாசன், சிவக்குமார் சுந்தர்ராஜ், பிவாண்டி கிளை பொருளாளர் எம். எஸ்.முஸ்தாக் அலி மற் றும் பிவாண்டி கிளை துணைச் செயலாளர் பேராசிரியர் சம்பத் ஆகி யோர் நலத்திட்ட உதவி களை வழங்குகின்றனர்.

சிறப்பு அழைப்பாளர்கள்

முகமது அலி, ராமலிங் கம், ஷாகுல் ஹமீது, ஜெயக்குமார், சபீர் ஷேக், ஜாகிர் ஹசன், கோவிந்தன், சபி, ஜைய ராம், வி வி பெருமாள், முத்துக்குமார், கு. தர்ம லிங்கம், க. ஜீவானந்தம். தானே திமுக ஜாகிர் உசேன், நெல்லை பைந்த மிழ், ஆர் பாலமுருகன், எஸ் பெருமாள், தமிழின நேசன், மா. கதிரவன், நம்பி, முத்தமிழ் தண்ட பாணி, ராஜேந்திரன், மூர்த்தி, பழனி, அப்துல் லத்திப், கி. வீரமணி, பா. உதயகுமார், பொய்சர் மூர்த்தி,

உ.அமரன், ரஜகை நில வன், சி.சுடலை யாண்டி, அ.வேலையா, ரமேஷ்.

அ. அருணாச்சலம், ஜஸ்டின், ஆழ்வார், பொன்மணி, தில்லை, திவா வேல்முருகன், எம். இ. முத்து, குலசேகரன், ஆறுமுகம், மாரி, சங்கர சுப்பு, ஜி. பசுபதிநாதன், டி செல்லத்துரை, பாண்டு, மாடசாமி, ஐயப்பன், சரவணன், பர மசிவம், விஜயகுமார், அம்பர்நாத் ராமு, உதய சூரியன், ரமேஷ் மற்றும் பலர் சிறப்பு அழைப்பா ளர்களாகக் கலந்து கொள் கின்றனர்.

அனைத்துக் கழக உணர்வாளர்களும் விழா வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு விழாக் குழுவினர் அன்புடன் அழைக்கின்றார்கள்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் S.I.R. கண்டித்து ஆர்ப்பாட்டம்!

திருவல்லிக்கேணி பகுதிக் கழக நிர்வாகிகள் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் வேண்டுகோள்!

சென்னை, நவ. 11

திருவல்லிக்கேணி பகு திக் கழகச் செயலாளர் ஏ. ஆர். பி. எம். காமராஜ் விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:

சென்னை மேற்கு மாவட்டம், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் (S.I.R) சீராய்வை தேர்தல் ஆணையம் கைவிட கோரியும், மத்திய பா.ஜ.க. அரசின் கைப்பா வையாக மாறிய எதேச்சதி கார போக்குடன் செயல்ப டும் மத்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் செயல்படுவதை கண் டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (11.11.2025 செவ்வாய்க்கி ழமை) காலை 9 மணிக்கு, சேப்பாக்கத்தில் அமைந் துள்ள மத்திய அரசின் தொலைக்காட்சி அலுவல கம் முன்பு மாவட்டக் கழ கச் செயலாளர் நே.சிற்ற ரசு எம்.சி. தலைமையில் நடைபெறுகிறது.

இக்கண்டன ஆர்ப் பாட்டத்தில் வீ.பி.பொன் னரசு, ஆர்.என்.துரை, ஆர். சுபேர்கான், வி.என். ராஜன், ப.பிரகாஷ், ஏ.விஜ யராஜ், இ.இளம்பாரதி, வே.கமலா செழியன், ரவி ராஜ்குமார், எம்.கே. ஆனந்த், ம.தயாநிதி, கே.திருநாவுக்கரசு, சி.தின கரன், ரா.பத்மாவதி, எம். பிரேம் ராஜா, எம்.சங்கர், ஜெ.விஜயகுமார், க.வே. மோகன், என்.ரவி, கே. பிரபு, கே.ஜி.செந்தில்கு மார், எஸ்.சசிகுமார், எம். கலில் ரகுமான், ஆர்.சசிகு மார், வெ.சீனிவாசன், ஆர்.கஜேந்திரன், மா.பச் சையப்பன், எஸ்.விஜயகு மார், ஏ.பி.வேலு, ஆர். ராஜ்குமார், எல். துளசிராமன், வி. தினேஷ் குமார் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழகத் தோழர் கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருவல்லிக் கேணி பகுதிக் கழகச் செய லாளர் ஏ.ஆர்.பி.எம்.காம ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்திற்கு உட்பட்ட 410, 411, 413, 414, 425, ஆகிய பாகங்களில் SIR வாக்காளர் கணக்கிட்டு படிவங்களை தேர்தல் முகவரால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது இந்நிகழ்வில் வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் அவர்கள் அனைத்து பாகங்களின் கழக பாக முகவர்களுடன் களப்பணியில் ஈடுபட்டார். உடன் மாவட்ட பிரதிநிதி எம்.சி.எழில்அரசு, மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தமிழ்நாடு முதல்வரின் ஆணையையேற்று சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி, என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி துறைமுகம் மேற்கு பகுதி 54:அ வட்டத்தில் பாகம் எண். 34 இல் தாண்டவராயன் தெருவில் SIR இன் வாக்காளர் கணக்கீட்டு படிவத்தை பாகத்தின் பாக நிலை அலுவலர் கலைவாணி வாக்காளர்களிடம் பூர்த்தி செய்து தருமாறு வழங்கினார். பகுதி செயலாளர் எஸ்.முரளி, வட்ட செயலாளர் பா. கதிரவன், பாகமுகவர் சுந்தரவிநாயகம், பி.டி.ஏ.மித்திகா, ஜெயின் களப் உடன் பணியாற்றினர்.

கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியச் செயலாளர்

பி.கோவிந்தன் மறைவு!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ.11-

கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியச் செயலாளர் பி.கோவிந்தன் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந் துகிறோம்.

தகவல் அறிந்து துயருற்ற கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக முன்னோடி பி.கோவிந் தன் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்க லைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் இரங்கல் செய்தி வரு மாறு:

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய செயலாளராகப் பணியாற்றி வந்த பி.கோவிந்தன் அவர்கள் உடல் நலம் பாதிக்கப் பட்டு கடந்த சில தினங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மதியம் 1.00 மணி அள வில் சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தினார்.

இவர் கடந்த 11 ஆண்டுகளாக ஒன்றிய செயலா ளராக பணியாற்றியவர். ஒருமுறை ஒன்றிய குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

திறம்பட கழகப் பணியாற்றி வந்த அடலேறு கோவிந்தன் அவர்களின் மறைவு மிகுந்த வருத்த மளிக்கிறது.

அன்னாரை இழந்து துயருறும் அவரது குடும் பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்க ளுக்கும் கழக முன்னோடிகள் - தோழர்களுக்கும் எனது ஆறுதலையும் - அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கி றேன்.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எழும்பூர் கு. வீராசாமி

நவம்பர் 11 (2015)



மொழிப் போர் தியாகியான இவர், எழும்பூர் பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் ஒருவராகவும் – தலைமைக் கழகப் பேச்சாளராகவும் விளங்கியவர்.

எழும்பூர் பகுதிக் கழகப் பொறுப்பாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகத்தின் தொழிற் சங்கப் பணிகளில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

இராயபுரம் கழக முன்னோடி

ந.தென்னரசு தாயார் மறைவு!

ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, நவ.11-

இராயபுரம் கழக முன் னோடி ந.தென்னரசு தாயாரும், கழக மூத்த முன்னோடியுமான திரு மதி ந.ஞானசௌந்தரி (வயது 85) அவர்கள் வயது மூப்பின் காரணமாக 06.11.2025 வியாழன் அன்று இயற்கை எய்தி னார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

7.11.2025 அன்று நடந்த இறுதி அஞ்சலியில் ஜே. ஜே. எபினேசர் எம்.எல்.ஏ., சென்னை நகரமைப்பு குழு தலைவர் தா.இளைய அருணா, நா.சண்முகம், இரா. லட்சுமணன், இரா. செந்தில், பெ. கண்ணன், க.கலைச்செல்வன், ஆர்.வி. கணேஷ், மா.நாகராஜன், இரா.நரேஷ், அ.ஞானசே கர், மு.கலியா, மு.டில்லி, கு.நற்குணன், கு.சுதாகர், எஸ்.கேசவன், அ.ரகுபிர சாந்த், டி.விஜி, கே.கணே சன், த.மரியசெல்வம், குப் பன் ஹென்றி, இராமநா தன், சாலமன், அறிவகம் ராஜா, மு.சந்திரகுமார் மற் றும் ஏராளமான கழக முன் னணியினர் கலந்து கொண் டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மணப்பாறை கா.அன்பழகன்

நவம்பர் 11 (2018)



கழகம் துவக்கப்பட்ட போதே, தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

முதன்முதலாக மணப்பாறையில் கிளைக் கழகத்தை துவக்கி, அக்கிளைச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

1964ல் குளித்தலையில் நடைபெற்ற சட்ட நகல் எரிப்பு போராட்டத்தில் அன்பிலார், பரமத்தி சண்முகம், குளித்தலை முத்துகிருஷ்ணன் போன்ற கழக முன்னோடிகளுடன் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு, மூன்று மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறைவாசம் அனுபவித்தவர். அதுமட்டுமல்லாமல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.